# யாழ். போதனு வைத்தியசாலை அபிவிருத்திக்கு வரவு-செலவு திட்டத்தில் 7 கோடி ரூபா ஒதுக்கீடு!


விலை ரூபா 3-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 புரட்டாதி: 28 ஹ: அவ்வல் பிறை: 24 இதழ்: 172
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 14-10-1990


## பிரதமர் தகவல்

(கொழும்பு)

யாழ். போதனு வைத்திய சாலை அபிவிருத்தி வேலைகளுசகு ஸ்ரீலங்கா அரசின் வரவு செலவுத் திட்டத்தில் 7 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை பிரதமரும், நிதியமைச்சருமான திரு. டி. பி. விஜயதுங்கா நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு மாதங்களாக நிகழ்ந்த விமானக் குண்டுவீச்சுக்களினுலும் ஷெல் தாக்குதல்களினுலும் பலத்த சேதமடைந்துள்ள உபகரணங்கள் கட்டிடங்களின் திருத்த வேலைகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. [வி]

வலி. வடக்கில்

## ஹெலி தாக்குதலினுல் பொதுமக்கள் அச்சம்

(காங்கேசன்துறை)

வலி. வடக்குப் பகுதியில் ஹெலியின் தாக்குதல் அதிகரித்து வருவதால்பொதுமக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

வலி.வடக்கில்ஊரடங்குச்சட்டம் அமுலிலுள்ளதுபோதும் மக்கள் நடமாட்டம் இருந்து வருகிறது. இப்பகுதியில் அடிக்கடி ஹெலி வட்டமிட்டு 'கலி

(4-ம் பக்கம் பார்க்க)

கடந்த நான்கு மாதங்களில்

# வடக்கு - கிழக்கில் கைதான 900 தமிழரைக் காணவில்லை

## 3,500 பேர் படுகொலை; 17,000 பேர் காயம்!

[பாரிஸ்]

**இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடந்த நான்கு மாதங்களில் சிங்கள இராணுவத்தினராலும், ஊர்காவல் படைகளாலும் கைதான 900 தமிழர்கள் பற்றிய விபரங்கள் எதுவும் தெரியவில்லையென்றும் இவர்கள் காணுமல் போயிருக்கலாமென்றும் 'ஏஜென்ஸி' செய்திஒன்று தெரிவித்துள்ளது.**

இதுபற்றி ஜெனிவாவில் உள்ள 'மனித உரிமைகள் சங்கத்'திற்கும் முறையீடு செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக விபரங்களை சேகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஏஜென்ஸி செய்தி மேலும் தெரிவிக்கையில் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் 3,500 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் 17,000 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

நான்கு மாதங்களில் 5,000 ற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக பக்ஐசார்பற்ற செய்திகளும் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## சிங்கள இராணுவம் மீது புலிகள் தாக்குதல் "பவல்" வாகனம் சேதம்

[வவுனியா]

வவுனியா பாவற்குளம் பகுதியில் சிங்கள இராணுவம் ரோந்து வந்தபோது விடுதலைப் புலிகள் ஆர். பி, ஜி. தாக்குதல் மேற்கொண்டதில், இராணுவத்தினர் வந்துகொண்டிருந்த 'பவல்' வாகனம் முற்ருகச் சேதமடைந்தது.

மேற்படி வாகனத்தில்வந்த இராணுவத்தினர் சிலர் கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரியவருகிறது. (வி)

தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாண

## சிங்கள முஸ்லிம் கட்சிகள் பெரும் முட்டுக்கட்டை

(கொழும்பு)

தமிழ் மக்கள் சுமுகமான தீர்வையொன்றை காண்பதில் சிங்கள எதிர்கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் பெரும் முட்டுக்கட்டையாக உள்ளதாக கொழும்பில் அரசு வட்டாரங்களில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்பு, மாகாண சபைக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவது தொடர்பாக பொதுக் கருத்தொன்றை எட்டும் நோக்கில் ஜனுதிபதி கூட்டிய

(4-ம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வந்தாறுமூலையில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த சிங்கள இராணுவத்தினரை தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்கியதில் ஒரு இராணுவ சிப்பாய் ஸ்தத்திலேயே கொல்லப்பட்டார்.

பல இராணுவத்தினர் காயமடைந்துள்ளார்களென தெரியவருகிறது. (153)

காங்கேசன்துறையில்

## ஆயுதப் படையினரின் நடவடிக்கை அதிகரிப்பு

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை இராணுவ முகாம் பகுதியில் ஆயுதப் படையினரின் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை இராணுவ முகாம் அருகிலுள்ள கடற்பகுதியில் பாரிய கடற்படைக் கப்பல்களின் நடமாட்டமும், பீரங்கிப் படகுகளின் நடவடிக்கைகளும் கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளன. இரவு பகலாகப் பீரங்கித் தாக்குதலும் இடம்பெறுகிறது.

சிமெந்து ஆலைப்பகுதி, மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, கீரிமலைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலும் இடையிடையே இடம்பெறுகிறது. (86)

மட்டுநகர்

## மோதலில் இரு சிங்கள இராணுவத்தினர் பலி

[மட்டுநகர்]

மட்டுநகர் ஊறணி பிள்ளையார் கோவிலடியில் நேற்று சிங்கள இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற கடும் மோதலில் இரு சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்ததாகத் தெரியவருகின்றது. [வி]

## அத்தியாவசிய பொருட்கள் வடமராட்சியில் விலை உயர்வு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் பெருமளவு அதிகரித்திருப்பதாகவும் கடைகள் விலைப்பட்டியலை வைப்பதில்லையென்றும் புகார் செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி தவிர்ந்த ஏனைய இடங்களில் ஒரு கொத்து அரிசி ரூபா 25-00, ரூபா 27-00 வரை விற்கும் போது இங்கு கொத்து ரூபா 30-00 முதல் ரூபா 32-00வரையும் மற்றைய இடங்களில் ஒரு

(4ம் பக்கம் பார்க்க)

கடற்படை

## முகாம்மீது தாக்குதல்

(திருமலை)

திருமலை குச்சவெளி கடற்படை முகாம்மீது நேற்றுமுன் தினம் விடுதலைப்புலிகள் இரவு 9 மணிக்கு கடுமையான ஷெல் தாக்குதல்மேற்கொண்டனர். ஆனுல் சேதவிபரம் தெரியவில்லை. (வி)

## மட்டு-கொழும்பு பஸ்சேவை மீண்டும் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபை மட்டக்களப்புக்கும் கொழும்புக்குமான சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இச்சேவை தினசரி இரண்டு தடவைகள் நடாத்தப்பட்டு வருவதாக கிழக்கு பிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இச்சேவை நெருக்கடி நிலைமை காரணமாக நான்கு மாதங்களாக நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [ச]

# "கலை இலக்கியங்கள் சமகாலத்தோடு இணைந்து உருவாக்கப்பட வேண்டும்"

## - ஆஞ்சநேயர் கருத்து

(அச்சுவேலி)

''காலத்தோடு இணைந்தும், மக்களின் எண்ணங்களையும் புலப்படுத்துவனவாகக் கலை, இலக்கியங்கள் உருவாக்கப்படவேண்டும். அத்தகைய கலை, இலக்கியப் படைப்புக்கள் மக்களின் மதிப்பு, மரியாதையைப் பெற்று வந்துள்ளது'' என்று யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. இ. ஆஞ்சநேயர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை, கலாசாரப் பிரிவினர் தயாரித்தளித்த 'போர் நிலத்திலே புனிதத் தாய்' சிந்து நாடகக் கூத்தின் அரங்கேற்று வைபவம் அச்சுவேலி தெற்கு சிவசக்திகோயில் வீதியில் அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

திரு. ஆஞ்சநேயர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''மக்கள் சக்தியாக உருவெடுத்த போராட்டங்கள் நிச்சயம் வெற்றி அடையும். இதற்கு வியட்நாம் போர் நல்ல எடுத்துக்காட்டாகும். அதேபோன்று எமது போராட்டமும் வெற்றிபெறும்.

''தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எல்லா மக்களும் வேறுபாடுகளை மறந்து முழுமையான பங்காளர்களாக இணைய வேண்டும். தமது ஆற்றலுக்கு ஏற்பத் தமது பங்களிப்பை வழங்க வேண்டும்'' என்று கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் திரு. பி. மூர்த்தி, கோப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. செ. பாலன் உட்படப் பலர் உரையாற்றினர். (74)

# மருந்தக ஊழியர்களுக்கு கர்ப்பிணிகள் பாராட்டு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை அரசினர் மருந்தகத்தில் கர்ப்பிணிகளுக்கான கிளினிக் சிறப்பாக நடைபெற்று வருவதாக வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணிகள் பாராட்டி வருகின்றனர்.

இந்த மருந்தகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் இன்றைய கஷ்டமான சூழ்நிலையிலும் நேரம்தவறாது சமுகமளித்து தமது கடமைகளைச் சிறப்பாகச் செய்துவருவதாகவும் டாக்டரினதும் குடும்ப சேவையாளரதும் தன்னலம் கருதாத சேவைபாராட்டத்தக்கது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தார்கள். (139)

# ஓய்வூதியம் பெறுபவர் இடையூறுகள் நிவர்த்தி

(யாழ்ப்பாணம்)

அரசாங்க வங்கிகள் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்கள் கடந்த நான்கு மாதங்களாக அவற்றைப் பெறுவதில் ஏற்பட்டிருந்த இடையூறுகள் தற்போது ஓரளவுக்கு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியக்காரர்கள் ஜூலைமாத ஓய்வூதியத்தை பெறமுடியாது பெரும் இன்னல் படுகின்றனர்.

ஜூலை மாதத்துக்கான வவுச்சர்கள் இன்னும் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு வந்து சேரவில்லை எனக் கூறப்படுகின்றது. (வி)

## குருநகரில் இடம்பெற்ற

# விமானத் தாக்குதலினால் வீடுகள் முற்றாக தரைமட்டம்

## மீன்பிடி வள்ளங்கள் சேதம்

(ஏ. தேவராசா)

கலகலப்பாகவும், மக்கள் கூட்டம் நிறைந்தும் காணப்படும் யாழ்ப்பாணம் குருநகர் பகுதி தற்போது சுடுகாடாகவும் மனித சஞ்சாரமற்ற சூனியப் பிரதேசமாகவும் காட்சியளிக்கின்றது.

சிங்கள அரசின் விமானக் குண்டு வீச்சினால் இப்பகுதியில் உள்ள 99 வீதமான வீடுகள் சேதமடைந்து விட்டது. சிங்கள இராணுவத்தினால் யாழ். கோட்டை முகாமிலிருந்தும் மண்டைதீவில் தற்காலிகமாக நிலைகொண்டிருந்த இராணுவத்தினராலும் பலாலி இராணுவமுகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகளினாலும் விமானப் படையின் குண்டு மழையினாலும் கடற்படைப் பீரங்கித் தாக்குதல்களாலும் இங்குள்ள உள்ள வீடுகள் அனைத்தும் சேதமாக்கப்பட்டுள்ளது.

### பாதிப்பு

இராணுவ நடவடிக்கைகளினால் வடமாகாணத்திலேயே மிக கூடுதலாக பாதிக்கப்பட்டபகுதி என்றால் குருநகர் பகுதி என்றே துணிந்து கூறலாம்.

குண்டு தாக்குதல்கள் ஆரம்பிப்பதற்கு முன்னரே இப்பகுதிகளில் இருந்து பெரும்பாலான மக்கள் இடம் பெயர்ந்ததினால் உயிர்சேதங்கள் மிகக்குறைவாக உள்ளது.

இடம் பெயர்ந்த மக்கள் தற்போது தமது பகுதிக்கு திரும்பி வந்த போது தங்களுடைய வீடுகள் தரைமட்டமாகி உருக்குலைந்த நிலையில் இருப்பதைக் கண்டு இருப்பதற்கு இடம் ஏதுவுமின்றி குழந்தை குட்டிகளுடன் வீதிகளின் ஓரமாக கவலை தோய்ந்த முகத்துடன் காணப்படுகிறார்கள்.

### 5 கிராமசேவையாளர் பிரிவு

ஐந்து கிராமசேவையாளர்களை உள்ளடக்கிய குருநகர் பகுதியில் 30,000 ஆயிரம் மக்களைக் கொண்ட நாலாயிரம் குடும்பங்கள் வாழ்கின்றார்கள். இந்த நாலாயிரம் குடும்பங்களின் வீடுகளும் பெரும்பாலும் சேதமடைந்தே இருக்கின்றது.

### தரைமட்டம்

குருநகர் பகுதியில் உள்ள தண்ணீர்த்தாங்கிக்கு அருகாமையில் உள்ள 4-ம் குறுக்குத் தெருவில் 27 வீடுகள் இருந்தன சகடை விமானக்குண்டு வீச்சினால் இந்த 27 வீடுகளும் தடைமட்டமாகிவிட்டன. இப்பகுதிகளில் உள்ள வீதிகள் அனைத்தும் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் இருக்கின்றது.

### தொழில் பாதிப்பு

இப்பகுதிகளில் உள்ள தேவாலயங்கள் நூல் நிலையங்கள், பாடசாலைகள் மருத்துவமனைகள் தொழிற்சாலைகள் அனைத்தும் பெரும் சேதத்திற்குள்ளாகி உள்ளது. வீடுவாசல்களையும் பொருள் பண்டங்களையும் இழந்து இன்று நிர்க்கதியாக நிற்கும் குருநகர் மக்கள் தொழில் ரீதியிலும்பெரும்பாதிப்படைந்துள்ளனர். இவர்களின் வள்ளங்களும், வலைகளும், அதன் உபகரணங்களும் விமானக் குண்டுவீச்சினால் சேதமடைந்தும், எரிக்கப்பட்டும் உள்ளதாக, இப்பகுதி கிராமசேவையாளர் திரு. ஆர். அன்ரனி தெரிவித்தார்.

### அகதிகள்

குருநகர் பகுதியில் உள்ள பெரும்பாலான மக்கள் தற்போதும், கிழக்கு அரியாலை, மண்ணித்தீவு, பள்ளிக்குடா போன்ற இடங்களிலேயே அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

## ஒல்லாந்து வாசி யாழ். வருகை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் ஒல்லாந்து தேசத்தவருமான திரு. சி. பி. பவிந் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்து நிவாரணப்பணிகளை மேற்கொண்டபின் கொழும்பு திரும்பினார்.

வை. எம். சி. ஏ, மெதடிஸ்த திருச்சபை அங்கிலிக்கன் திருச்சபைகளின் ஊடாக இவர் தமது நிவாரணப்பணிகளை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. (139)

## தேங்காய் விலை அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்குப்பகுதியில் தேங்காயின் விலை மிகவும் அதிகரித்துள்ளது. பண்டத்தரிப்பு, சங்கானை ஆகிய இடங்களிலுள்ள சந்தைகளில் தரமான நல்ல தேங்காய் 12 ரூபா தொடக்கம் 13 ரூபாய் வரை விற்பனையாகிறது. (72)

# காசோலை கிடைத்ததும் மாற்ற முடியாதநிலை

(சித்தன்கேணி)

காரைநகர் கொத்தணி பாடசாலைகளின் ஆசிரியர்கள் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களுக்குரிய சம்பளக் காசோலைகளை மாற்றமுடியாமல் பெரும் அவதியுறுகின்றனர்.

காரைநகர் கொத்தணி அமைப்பின் கீழ் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக் கிளையின் காசோலைகள் வழங்கப்பட்டமையினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை இலங்கை வங்கி முழுமையாகச் சேதமடைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த ஆசிரியர்கள் தங்களுக்கு வேறு வங்கிக் கிளைகளின் காசோலைகள் வழங்குவதற்கு பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரிகளும், காரைநகர் கொத்தணி அதிபரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுகின்றனர், (137)

## மழைவேண்டி கொடும்பாவி

(பண்டத்தரிப்பு)

மழை பெய்ய வேண்டி பண்ணாகம் கிராமத்தில் நேற்று முன்தினமிரவு கொடும்பாவி கட்டி இழுக்கப்பட்டது.

மழையின்மையால் விதைத்த நெற்பயிர்கள் அழிந்து போகும் நிலை ஏற்பட்டதை அடுத்து இக்கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கொடும்பாவிகட்டி ஊர்விதிகளூடாக எடுத்துச்சென்று பண்ணாகம் வழக்கம்பரை சந்தியில் வைத்து தகனம் செய்தனர். (72)

## சேமிப்பு கணக்கு

# ஆரம்பிப்பவர் தொகை அதிகரித்து வருகிறது!

(சுன்னாகம்)

சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிப்பவர்களின் தொகை அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளதாக தெரியவருகின்றது.

பணத்தை திரும்பபெற்றுக் கொள்வது இலகுவாக இருப்பதினாலே கணக்கு திறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது.

பெரும்பாலும் ஆசிரியர்களே சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து தமது சம்பளக் காசோலைகளை வைப்புச் செய்து விரைவில் பணமாக்கிக்கொள்கின்றனர்.

## அச்சுவேலி, புத்தூர்

# பாடசாலை அதிபர்கள் இடமாற்ற விபரம்

(அச்சுவேலி)

அச்சுவேலி புத்தூர் கொத்தணி அமைப்பில் உள்ள பாடசாலை அதிபர்கள் இடமாற்ற விபரம் வருமாறு: அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை அதிபர் ஏ. விக்னேஸ்வரராசா ஆவரங்கால் மகாஜனவித்தியாலய அதிபராக இடமாற்றப்பட்டுள்ளார்.

ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலய அதிபர் திரு. பி. கதிரித்தம்பி (எஸ். எல். ஈ. எஸ்) அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய அதிபராக இடமாற்றப்பட்டுள்ளார்.

ஆவரங்கால் மகாஜனவித்தியாலய அதிபர் எஸ். சண்முகரத்தினம் வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலய அதிபராக இடமாற்றப்பட்டுள்ளார்,

வாதரவத்தை விக்கினேஸ்வரவித்தியாலய அதிபர் எஸ்.முத்துக்குமாரசுவாமி ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலய அதிபராக இடமாற்றப்பட்டுள்ளார். (74)

## பெரியபுராணபடன பூர்த்திவிழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சங்கரத்தை அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்மன்கோவிலில் தீபாவளித் தினத்தன்று பெரிய புராண படனப் பூர்த்திவிழா வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

சைவமணி சி.மருதப்பிள்ளையினால் தொடர்ந்து நடாத்தப்பட்டுவந்த பெரிய புராண படனப்பூர்த்திவிழாவில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர், ஆசிரியர் எஸ்? குணபாலசிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர். (129)

விளம்பரம்

தேவை

இலுப்பை, வேப்பம் விதைகள் பெருமளவில் தேவை. மில்க்வைற். யாழ்ப்பாணம். (ஏ 827)

இடமாற்றம்
அம்பலவாணர் அன் சன்ஸ்

யாழ்ப்பாணம் 196, காங்கேசன்துறை வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம், நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக கீழ்க்காணும் முகவரிக்கு வாடிக்கையாளர்கள் நன்மை கருதி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அம்பலவாணர் அன் சன்ஸ்
327, நாவலர் வீதி,
(நாவலர் கலாசார மண்டபத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

மு. சந்திரசேகரம்
நிர்வாகி.

(ஏ 828)

## ★ 83 கலவரம்; வெலிக்கடை படுகொலை நினைவிலில்லையா?

# குண்டு வீச்சுக்குப் பயந்து

# கொழும்புக்கு போகலாமா?

''நிலவுக்கு ஒழித்து பரதேசம் போன கதை.' என்பது நம் தமிழர் மத்தியில் பரம்பரை பரம்பரையாக வழங்கி வரும் பழமொழியாகும்.

பழமொழிகள் அன்றும் இன்றும், என்றும் தனிமனித சமுதாய போக்குகளை படம் பிடித்து காட்டத் தவறுவதேயில்லை.

தமிழ்மண்ணைக் காத்து, தமிழினத்தின் தனித்துவத்தை நிலைநாட்டி, தமிழ்மொழியின் வளத்தினைஏற்றிட தமிழ் இளைஞர் சமுதாயம் தமது இன்னுயிரை துச்சமென நினைத்து போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில்- அதே இனத்தின் சொந்தங்கள், பந்தங்கள் தம் மண்ணை விட்டு எப்படியும் தப்பியோடிவிட வேண்டும் என்று தென்பகுதிக்குப் படையெடுத்து ஓடுவது 'நிலவுக்கு ஒழித்து பரதேசம் போனகதை' என்ற பழமொழியை நினைவூட்டுவதாகவே அமைந்துள்ளது.

தமக்கு உரித்தானமண்ணிலேயே தமது உரிமைகளை நிலைநாட்ட தமது பங்களிப்பைச் செய்ய தயங்கி, பயந்து தென்பகுதி என்ன, பாரதம் உட்பட பல்வேறுபட்டவெளிநாடுகளுக்கு பறந்தோடிச் சென்றாலும், இவர்களுக்கு நிரந்தர நிம்மதி கிட்டுமா? என்பதை அவர்களின் எதிர்கால வாழ்வு தான் பதிலளிக்கும்,

இன்று நேற்று அல்ல நூற்றுண்டு காலமாகவே நாடு விட்டு நாடுகளுக்கு நாடோடிக் கூட்டமாக ஓடிச் சாதனை படைத்த வேதனையான தமிழர் வரலாற்றை மூடிமறைக்க முடியாது.

### சிங்கப்பூர் பென்ஷனியர்

மலேஷியா, சிங்கப்பூர் பயணமாகி, இவர்கள் படைத்தது ''சிங்கப்பூர் பென்ஷனியர்'' என்ற பகட்டுப் பரம்பரையை தான்!

ஆங்கிலக்கல்வியை மூலதனமாக்கி, தென்பகுதிகளிலும், மலையகத்திலும் அரசாங்க உத்தியோகங்களில் கொடிகட்டிப் பறந்து பெரும்பான்மைஇனத்துடன் நெருக்கமாக நடமாடி சலுகைகள் பல அனுபவத்து ''மணிஒடர் பொருளாதாரத்தில் மனைவி மக்களுக்கு மந்திர மோதி முடிவில் கண்டது, கடந்த நாற்பது ஆண்டுகால இனவாத அரசியலுக்கு வித்திட்டதும் சிங்கள பேரினவாதத்தைபால் வார்த்து வளர்த்ததும்தான்.

### புற்றுநோயாக வளரவிட்டு.....

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் உத்தம ஊழியர்களாகவும், சிங்கள முதலாளித்துவவாத அரசியல் தலைவர்களின் நம்பிக்கை நட்சத்திரங்களாக இவர்கள் திகழ்ந்து தமிழ்இனத்தின் அடிப்படை தார்மீக பிரச்சனைகளை தீர்க்க வகையறியாது அவற்றை புரையோடு புற்றுநோயாக வளரவிட்டு, எதிர்கால சந்ததியினரின் வாழ்வைச் சூனியமாக்கி தம் சொந்தபந்தங்களைத் தப்ப வைத்துவிட்டு மறைந்தது தான் இவர்கள் படைத்த சாதனை?

### வெளிநாடுகளுக்கு அகதிகளாக

எப்பொழுதும் தாம் தப்பிவிட்டால் போதும் என்ற சுயநல வெறியில் திழைத்து வளர்ந்த பரம்பரை, கடந்த பத்தாண்டு காலத்திலும்,

**- மயூரன் -**

தமிழ் மண்ணைக் காக்க இளைஞர் சமுதாயம் முன்வந்த போது உருவாகிய சூழ்நிலையை தத்தமது சுயநல நோக்கத்துக்கே பயன்படுத்தி மீண்டும் தாம் தப்பிவிட்டால் போதும் என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் எடுத்த படையெடுப்பு மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க கனடா, ஆஸ்திரேலியா நாடுகளுக்கு அவதிகளாக, அகதிகளாக படைஎடுத்தது தான்!

மத்தியகிழக்கு நாடுகளுக்கு மேற்கொண்ட படையெடுப்பு வளைகுடா யுத்த கெடுபிடி தோன்றியதும், எத்தகைய விபரித விளைவை தோற்றுவித்துள்ளது என்பது புரியாதது அல்ல!

### பகைவர்களை நம்பி...

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பதற்கு ஒப்ப உலக நாடுகளுக்குப் படையெடுத்து, வாழ்வை வளம்படுத்த முனைவதை ஒருவாறு சகித்துக்கொண்டாலும் கடந்த 40 ஆண்டு காலமாகத் தமிழினத்தையே தனது சொந்த நாட்டில் பூண்டோடு அழித்துக்கொண்டிருக்கும் தென்பகுதி அரசியல்வாதிகளையும், அதன் ஆதரவாளர்களையும் நம்பி, மீண்டும் மீண்டும் அப்பகுதிகளுக்குப் பாதுகாப்புத் தேடிப் படையெடுப்பதே பரிதாபகரமானதும், பரிகசிப்புக்கு இடமானதுமாகும்.

கடந்த 4 மாதங்களாகத் தனது சொந்த நாட்டு மக்களையே வன்மையான பகைவர்களாகக் கருதிப் போர் தொடுத்து, குண்டுமாரி பொழிந்தும், மறைமுகப் பொருளாதாரத் தடைகள் போட்டும், பட்டினிச் சாவுக்கு உட்படுத்திவிட்டுத் தென்பகுதிக்குப் படையெடுந்துவரும் ஒருபகுதி மக்களை அவலத்திற்குள்ளாக்கி வருகின்றுர்கள்.

### இனக் கலவரம்

அரசாங்கமே திட்டமிட்டு நடாத்திய 83ம் ஆண்டு கலவரத்தின் அவலங்களையும், வெலிக்கடைச்சிறைச்சாலையில் அரங்கேற்றப்பட்ட படுகொலைச் சம்பவங்களை இதற்குள் தமிழ்மக்கள் மறந்து கொழும்பு பறந்தோடலாமா?

இத்தகைய அரசியல் போர் வரலாற்றை பல ஆண்டு காலம் அனுபவித்தும் திட்டமிட்டு நடத்தப்பட்ட இனக் கலவரங்களையடுத்து பல தடவை கப்பல், கப்பலாக அகதிகள் பட்டியலுடன் தாயகம் திரும்பிய பரிதாப நிகழ்வுகளை மறந்தும், நிலவுக்கு ஒழித்து பரதேசம் போனாலும் பரவாயில்லை, விமான தாக்குதலுக்கு பயந்து கொழும்புக்கு போவதே பரிதாபகரமானது.

இத்தகைய பரிதாப நிகழ்வுகள் நிலவும் காலம் நெருங்கிவிட்ட சம்பவங்கள் தென் பகுதியில் இடம்பெறத் தொடங்கிவிட்டன என்பது அண்மையில் வெளிவரும் செய்திகள் நிரூபித்துவருகின்றன.

---

## இராணுவ தகவலை வெளியிடக்கூடாது

# சோவியத்யூனியனுக்கு ஈராக் கடும் எச்சரிக்கை

(பாக்தாத்)

ஈராக்கின் இராணுவ பலம் பற்றிய தகவல்களை சோவியத்யூனியன் அமெரிக்காவிற்கு வழங்குமானுல் கடும்பின் விளைவுகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படுமென ஈராக் சோவியத்தை எச்சரித்துள்ளது:

சோவியத். ஈராக்குடன் முன்பு சுமுக உறவைக் கொண்டிருந்த சோவியத்திற்கு தெரியும் என்றும் அதனை அமெரிக்காவிற்கு வழங்கும் முயற்சியில்சோவியத் இறங்கியுள்ளதாவும் கூறப்படுகிறது.

இவ்வாறு நிகழும் பட்சத்தில் ஈராக்கில் தங்கியுள்ள சோவியத் நாட்டவர்கள் பலரின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் என்றும் ஈராக் கடுமையாக எச்சரித்துள்ளது. (சி)

---

## நான்கு மாதமாக உதவிப்பணம் கிடைக்கவில்லை

(சித்தன்கேணி)

காரைநகர்ப் பகுதியிலுள்ள வறியவர்கள், கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாகப் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறவில்லை. இதனுல் இவர்கள் பெரும் இன்னல் அடைகின்றனர்,

காரைநகர்ப் பகுதியிலுள்ள வறியவர்கள் கடந்த ஜூன் மாதத்திற்குப் பின்பு இதுவரை மாதந்தோறும் வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிப் பணத்தைப் பெருமல் பெரும் அவதிப்படுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்களுக்கே உதவிப் பணம் பெற நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுகின்றனர் (137)

---

## கௌரி விரதம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் மகாருத்திர யாகமும் கேதார கௌரி விரத இலட்சார்ச்சனையும் நேற்று 13ம் திகதி தொடக்கம் இம்மாதம் 18ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

---

## வலிகாமம் மேற்கில்

## வன்செயல் பாதிப்பு விபரம் திரட்டப்பட்டு வருகிறது

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வன்செயல்களினுல் இறந்த, காயமடைந்தவர்கள் விபரமும், சேதமடைந்த பொதுக் கட்டிடங்கள், தனியார்வீடுகள் ஆகியவற்றின் விபரங்கள் கிராமசேவை அலுவலர்களினுல் திரட்டப்படுகின்றது.

கடந்த ஜூன் மாதத்துக்கு பின்பு வன்செயல்களினுல் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள்விபரம், சேதமடைந்த ஆலயங்கள், அரசாங்ககட்டிடங்கள், பொதுக்கட்டிடங்கள், தனியார் வீடுகள் ஆகியவற்றின் விபரங்களை சம்பந்தப்பட்டவர்கள் கிராமசேவை அலுவலர்களிடம் சென்று பதிவுசெய்து கொள்ளுமாறு சங்கானை உதவி அரசாங்கஅதிபர் திரு. து, வைத்திலிங்கம் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (137)

---

# மாணவர்கள் பலர் கடத்தல் பாடசாலைகள் ஸ்தம்பிதம்

(கராச்சி)

பாகிஸ்தானில் கராச்சியில் பாடசாலை மாணவர்கள் பலர் தொடர்ந்தும் கடத்தப்பட்டு வருவதால் பாடசாலைகள் தொடர்ந்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இனந்தெரியாத ஆயுதபாணிகளால் இதுவரை 30 மாணவர்கள் கடத்தப்பட்டுள்ளனர். இவர்கள் பற்றிய தகவலெதுவும் இதுவரை தெரியவில்லை. கடத்தப்பட்ட மாணவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது சட்டவிரோத செயல்களுக்கு பயன்படுத்தப் படலாமெனவும் அஞ்சப்படுகிறது:

இதற்கு அரசியல் காரணமோ அல்லது வேறெதுவும் பின்னணியோவென பொலிசார் பலத்த விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதுவரை எதுவும் தெரியாததால் பெருமளவு பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளது. (சி)

---

# கோயில் மீது ஹெலி தாக்குதல்

(வடமராட்சி)

வல்லை வெளியிலுள்ள முனியப்பர் ஆலயத்தையும் அவ்வழியாகச் சென்றவர்கள் மீதும் நேற்றுமுன் தினம்ஹெலிகொப்டர் ஒன்று தாக்குதல் நடத்தியது.

மேற்படி தாக்குதலின் போதுபலர் ஆலயத்தினுள் பதுங்கியதால் உயிர்தப்பினர் சிலர் சிறுகாயத்துடன் தப்பியதாகவும் தெரியவருகின்றது.

மேற்படி தாக்குதலால் முனியப்பர் ஆலய கூரை பலத்த சேதமடைந்தது. (51)

---

# விவசாயிகளுக்கு உரம்வழங்க உதவுமாறு வேண்டுகோள்!

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு வழங்குவதற்காக ஆயிரம் அந்தர் யூரியா உரத்தையும் நானூறு அந்தர் ரி. டி. எம். உரததையும் அனுப்பிவைக்குமாறு உரக்கூட்டுத்தாபன வடமாகாண சந்தைப்படுத்தும் அதிகாரி திரு. ஜி. சிதம்பரநாதனிடம் சங்கப்பொதுமுகாமையாளர் திரு. எஸ்.வைரநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின்தலைமை அலுவலகத்திற்கு நேரடியாக வருகை தந்த திரு. ஜி.சிதம்பரநாதனிடம்எழுத்து மூலம் இவ்வேண்டுகோள்விடுக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து யாழ் கொண்டுவந்து ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஊடாக விவசாயிகளுக்கு விநியோகிக்க தாம் ஏற்கனவே நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும், இச்சங்கத்திற்கு தேவையான உரத்தையும் அப்போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் திரு. சிதம்பரநாதன் அங்கு உறுதியளித்துள்ளார். (72)

---

## ஆசிரியர் கடமையில் இல்லை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பல தமிழ் பாடசாலைகளில் நேற்றுமுன் தினம் நடாத்தப்பட்ட திடீர் சோதனையில் ஆசிரியர்கள் வரவு பதிவு செய்யப்பட்டிருந்தும் கடமையில் அவர்கள் இல்லாததை கல்விஇராஜாங்க அமைச்சர் தலைமையிலான கல்வி அதிகாரிகள்குழு கண்டுபிடித்துள்ளது. (ச)

# "கால்நடைகளை அவிழ்த்துவிடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்"

(யாழ்ப்பாணம்)

"கால்நடைகளை கட்டாக் காலிகளாக அவிழ்த்து விடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி தென்மராட்சிப் பிரிவினர் துண்டுப்பிரசுரம்மூலம்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இத்துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவதுதற்போது நாட்டில்'ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகமான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளதாலும் பயிர்ச் செய்கையின் காலம் நெருங்கி வருவதாலும் தயவு செய்து கால்நடைகளை கட்டாக்காலிகளாகஅவிழ்த்து விடாதீர்கள் இவ்வேண்டுகோளை அலட்சியப்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## ரான்ஸ்போமர் ஒயில் திருடர்கள் புலிகளிடம் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

ரான்ஸ்போமரிலிருந்து ஒயில் திருடிக்கொண்டிருக்கும்போது திருடர்கோஷ்டி ஒன்று வகையாக மாட்டிக்கொண்ட சம்பவம் கோப்பாய் தெற்கு நாவலடியில் நடந்துள்ளது.

கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு மின்சாரம் வழங்குமுகமாக ஒயில்விட்டதை அறிந்த திருட் இக்கோஷ்டியினர் இரவுவேளை அப்பகுதியில் புகுந்து திருடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது அவ்வீதியால் வந்த அவ்வூர் இளைஞர் ஒருவர் கூக்குரலிடவே திருட்டு கோஷ்டியினர் ஓடியபோது அதேவேளையில்வந்தவிடுதலைப் புலிகளைக்கண்டு திருடர்கள் தடுமாறினர்.

இவர்கள் மீது சந்தேகம் கொண்ட புலிகள் இவர்களை விசாரணை செய்தபோது சந்தேகம் வலுவடைந்தது. அவர்கள்தமது திருட்டை ஒப்புக் கொண்டதோடு இருபாலைச் சந்தியிலுள்ள ரான்ஸ்போமரிலும் தாங்களே திருடியதாகவும் மேலும் தெரிவித்தனர். இது தொடர்பாக மேலும் விசாரணைகள் நடைபெறுகின்றன

## அப்பியாசக் கொப்பி இறக்குமதி

(கொழும்பு)

இலங்கை அச்சகக் கூட்டுத்தாபனம் நாற்பது லட்சம் அப்பியாசக் கொப்பிகளை இறக்குமதி செய்துள்ளது.

இக்கொப்பிகள் பாடசாலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் விநியோகிக்கப்படுவதாக அச்சகக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்துள்ளார். (ச)

## ஆகஸ்ட் பென்ஷன் வவுச்சர்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தினுல் ஆகஸ்ட் மாத பென்ஷனுக்கு உரிய காசோலைகள் யாவும் சகல வங்கிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

செப்டெம்பர். அக்டோபர் மாத பென்சன் வவுச்சர்கள் அடுத்தவாரம் பருத்தித்துறைக்கு வரும் கப்பலில் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. (153)

## மழை பெய்தமையால் சேறு சகதியாக இருக்கும் கொம்படி வெளி வீதி

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழக்கிழமை பெய்த மழையைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்வதற்குப் பயன்பட்டுவந்த 'கொம்படி வெளி' வீதி சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது.

இதனுல் இவ்வீதியில் போக்குவரத்துச் செய்வதில் சகல வாகனங்களும் பெரும் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் யாழ். நகரிலிருந்து வவுனியா நோக்கிப் பிரயாணிகளுடன் சென்றுகொண்டிருந்த மூன்று மினி பஸ்கள் சேற்றில் புதைந்த நிலையில் நிற்கின்றன.

இவ்வெளியில் ஹெலிகொப்டர் தாக்குதலினுல் சேதம் அடைந்த நிலையில் பல வாகனங்கள் காணப்படுகின்றன.

## வலி. வடக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பர்' தாக்குதலைமேற்கொண்டு வருகிறது.

காங்கேசன்துறை, மாவிட்டபுரம், தெல்லிப்பழை, மல்லாகம் பகுதிகளில் அடிக்கடி ஹெலியிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது ஊரடங்கு நீக்கப்பட்ட சுன்ணுகம், மருதனுமடம் பகுதிகளிலும் ஹெலியின் தாக்குதல் இடம் பெறுகிறது.

வலி. வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தங்கள் வீடுகளை பார்த்துவரச் செல்வோர் இதனுல் பெரிதும் பதற்றமடையநேருகிறது.(86)

## மட்டக்களப்பில் 46,000 அகதிகள்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் 46,000 மக்கள் அகதிகள் முகாம்களில் இன்னும் தங்கி இருக்கிருர்கள்.

கடந்த நான்கு மாதங்களாக மேற்படி முகாம்களில் இருந்து வருகிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (153]

## "சிவனை வழிபடவேண்டிய நாளில் சிவாலயங்கள் பூட்டிக்கிடப்பது பெரும் வேதனையைத்தருகின்றது"

(காங்கேசன்துறை)

"சிவனுக்கு பூசை ஆராதனைகள் செய்து வழிபாடு செய்யவேண்டிய இன்றைய நாட்களில் பல சிவாலயங்கள் பூசை ஏதுமின்றி பூட்டிக் கிடப்பது சைவ மக்களுக்கு பெரும் வேதனையைத் தருகிறது" என்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இடம்பெற்ற கேதார கௌரி விரத பிரார்த்தனையில் கலந்து உரையாற்றிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"தற்போது அனுஷ்டிக்கப்படும் கேதாரகௌரி நோன்பு காலத்திலும் சிவனையே வழிபட்டுஉய்தியடைய வேண்டும். அத்துடன் புரட்டாதி சனி விரத நாட்களிலும் சிவனுக்கு அர்ச்சனை செய்து தோஷங்களை நிவர்த்திக்க வேண்டும். ஆனுல் இன்று திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற பல சிவாலயங்கள் பூசை ஏதுமின்றி மூடிக்கிடக்கின்றன. இதனுல் சைவ மக்கள் பெரிதும் வேதனைப்படுகின்றனர்." (86)

## யாழ். செயலக ஊழியர் சம்பளம்

(மானிப்பாய்)

யாழ். செயலக ஊழியர்களின் கடந்த மாதச்சம்பளம் ஆயிரம் ரூபா முற்பணமாக வழங்கப்பட்டுள்ளது.

இவர்களது சம்பளம் முழுமையாக வழங்குவதற்குப் போதியளவு நிதி கையிருப்பில் இல்லையென்று கூறப்படுகிறது. (71)

## 2000 ரூபா வழங்கப்படும்

[சித்தன்கேணி)

கடந்த யூன் மாதத்துக்கு பின்பு வன்செயல்களினுல் இறந்தவர்களுக்கு ஈமைக் கிரியைகளின் செலவுக்கு யாழ். அரசாங்க செயலகத்தினுல் ரூபா 2000 வழங்கப்படவுள்ளது.

இப்பணத்தை பெற்றுக் கொள்வதற்கு சம்பந்தப்பட்டவர்களின் நெருங்கிய உறவினர்கள் தமது பிரிவு கிராம சேவை அலுவலர்களினதும் உதவிஅரசாங்க அதிபர்களினதும் சிபார்சுகளை பெற்றே இப்பணத்தைக் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரியவருகின்றது. [137]

## யாழ். பல்கலைக்கழக மின்னியல் உபகரணங்கள் அதிர்ச்சியால் கடும் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திலுள்ள பெறுமதி வாய்ந்த கம்பூட்டர் போன்ற எலக்ரோனிக் உபகரணங்கள் மின்சாரத்தடை காரணமாக கடும்பாதிப்புக்கு உட்பட்டு உள்ளன,

யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள உபகரணங்கள் குண்டு வீச்சினுல் நேரடியாக பாதிக்கப்படதாபோதிலும் அயலில் நடைபெற்ற குண்டு வீச்சுகளின் அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டிருக்கலாமென கருதப்படுகிறது.

இரசாயனதுறைக்கு ரூபா ஒன்றரை லட்சத்துக்கு மேற்பட்ட சேதங்கள் ஏற்பட்டுள்ளது. (153)

## மிதிவெடியில் ஐவர் பலி

(கல்முனை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றில் நேற்று 5 பொதுமக்கள் இராணுவத்தின் மிதிவெடிகளில் அகப்பட்டு பலியானுர்கள். (153)

## மாணவர் வரவு குறைவு

(வடமராட்சி)

வடமராட்சியில் பாடசாலைகள் ஆரம்பித்தபோதும் மாணவர்கள் வரவு மிகக்குறைவாகவே காணப்படுகின்றது சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் மட்டும் பாடசாலைக்குச் சென்று தினசரி பதிவேட்டில் ஒப்பமிட்டுச் செல்கின்ருர்கள். (51)

## தமிழர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அனைத்துகட்சி மாநாடு பெரும் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இம்மாநாட்டை சுதந்திரக் கட்சியும் அதன் ஐந்து தோழமைக்கட்சிகளும் சகல முஸ்லிம் கட்சிகளும், பகிஸ்கரித்தமையும்கலந்துகொண்ட சிங்களக்கட்சிகள் பல வடக்கு கிழக்கு இணைப்பை கடுமையாக எதிர்த்தமையும் அடுத்தே மேற்படி மாநாடு தோல்வியில் முடிவடைந்தது.

எனினும் எதிர்வரும் 18ம் திகதி இம் மாநாட்டை மீளக் கூட்டுவதற்கும் ஜனுதிபதி முயற்சித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## காரைநகர் கொத்தணி ஆசிரியர்கள் பெரும் அவதி

(சித்தன்கேணி)

காரைநகர் கொத்தணிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களுக்குரிய சம்பள காசோலைகளை மாற்றமுடியாமல் பெரும் அவதியுறுகின்றனர்.

காரைநகர் கொத்தணி அமைப்பின் கீழ் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக் கிளையின் காசோலைகள் வழங்கப்பட்டமையினுலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை இலங்கை வங்கி முழுமையாகச் சேதமடைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த ஆசிரியர்கள் தங்களுக்கு வேறு வங்கிக் கிளைகளின் காசோலைகள் வழங்குவதற்கு பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அதிகாரிகளும், காரைநகர் கொத்தணி அதிபரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுகின்றனர். (137)

## சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் விழுந்து மரணமான ஒருவரின் சடலம் மானிப்பாய் யாழ். போதனு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் கோண்டாவிலைச் சேர்ந்த பொன்னன்இராசன்(வயது55) என்றவயோதிபரின் சடலமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. (56)

## 3ம் கட்ட உணவுப் பொருள்

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு (சங்கானை) உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம். வெளி மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு 3ம் கட்ட இலவச உணவு விநியோகம் செய்வதற்குரிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார். (137)

## அரச வைத்தியசாலைகளில் படிவங்களுக்கு தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலும் மற்றும் அரசினர் மத்திய மருந்துச்சாலைகளிலும் டாக்டர்கள் நோயாளர்களை பரிசோதித்து மருந்து எழுதிக் கொடுப்பதற்கான பத்திரங்களுக்கும், வாட்டில் நோயாளர்களை அனுமதிப்பதற்கான படிவங்களுக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

வைத்தியசாலைகளில் பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் பதிவேடுகளுக்கும் பற்ருக்குறை நிலவுகின்றது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையிலும் வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கு இப்பத்திரங்களும், படிவங்களும், பதிவேடுகளும் கையிருப்பில் இல்லை என்றும் கொழும்பிலிருந்து தற்போதைய நாட்டு நிலைமையினுல் இவை அனுப்பிவைக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. [72]

## அத்தியாவசிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருத்தல் பாண் 7ரூபா 50சதம் விற்கும்போது வடமராட்சியில் 8 ரூபா 50 சதமாகவும், இதேபோல் பல அத்தியாவசிய பாவனைப் பொருட்கள் ஏனைய இடங்களை விட வடமராட்சியில் விலைகூட்டி விற்கப்படுவதால் பொதுமக்கள் பெரும் கஷ்டமடைந்து வருகின்ருர்கள். (51)

## மழைவேண்டி கொடும்பாவி

(பண்டத்தரிப்பு)

மழைபெய்யவேண்டிபண்ணகம் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு கொடும்பாவி கட்டி இழுக்கப்பட்டது.

மழையின்மையால் விதைத்த நெற்பயிர்கள் அழிந்துபோகும் நிலை ஏற்பட்டதை அடுத்து இக்கிராமத்தை சேர்ந்த இளைஞர்கள் கொடும்பாவிகட்டி ஊர்வீதிகள் ஊடாக எடுத்துச் சென்று பண்ணகம் வழக்கம்பரை சந்தியில் வைத்துதகனம் செய்தனர். (72]

## அமைதிவேண்டி பஜனை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை செபமாலை மாதா கோயிலில் நேற்றுமுன்தினம் மாலை நாட்டில் அமைதி வேண்டி பஜனை வழிபாடு நடைபெற்றது.

இந்த பஜனை வழிபாட்டை யாழ். திருமறை கலாமன்ற உறுப்பினர்கள் நடத்தினுர்கள். (153)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under nmber B/100306/81.